# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 29 வெள்ளிக்கிழமை (14-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 222


# கிளிநொச்சி முன்னரண் பகுதியில் புலிகள் - படையினர் கடும் சமர்!

கொழும்பு, ஒக. 14

கிளிநொச்சி பாதுகாப்பு முன்னரண்களில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் சமர் நடைபெற்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் படையினரின் முன்னணிப் பகுதியில் இருந்து முன்னேறிய படையினருடனேயே புலிகள்மோதலில் ஈடுபட்டனர்.

மோதலில் ஈடுபட்ட புலிகளுக்கு ஆதரவாக கிளிநொச்சிக்கு வடக்கிலும், மேற்கிலும் இருந்து வந்த புலிகளின் அணிகள் மீதும் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும்—

இந்த மோதலில் படையினர் பீரங்கி மற்றும் மோட்டார்களை பயன்படுத்தியதாகவும்—

படையினர் தரப்பில் 26 பேர் கொல்லப்பட்டதாகவும் 22 பேர் காயம் அடைந்ததாகவும் - இராணுவப் பேச்சாளர் கூறினார்.

புலிகள் தரப்பில் 110 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னணிக் காவலரண்களிலிருந்து சுமார் 8 மைல் தூரம் முன்னேறிய படையினர் மீளவும் தமது நிலைகளுக்கு திரும்பி விட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் இந்தமோதல்களில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து புலிகள் அறிவித்துள்ள போதிலும் செய்தித் தணிக்கை காரணமாக அது வெளியிடப்படவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# செம்மணிப் பகுதிக்கு அரசு முழு பாதுகாப்பு!

## அதிகாரிகள் குழு விரைவில் அங்கு செல்லும்

கொழும்பு, ஒகஸ்ட் 14

400 க்கு மேற்பட்ட பொது மக்கள் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்காலம் என்று கருதப்படும் செம்மணிப் பகுதிக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

செம்மணிப்பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் சடலங்களை இரவோடிரவாக அப்புறப்படுத்தமுயற்சிகள் மேற் கொள்ளப்படலாம் என்றும்—

இப்படியான சாத்தியங்களை தடுப்பதற்காக அரசு அப்பகுதியில் பாதுகாப்புப் போட வேண்டும் என்றும்- தமிழ்க்கட்சிகளும் மற்றும் மனித உரிமை அமைப்புகளும் அரசிடம் கோரிக்கை விடுத்துவந்தது தெரிந்ததே.

உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று விரைவில் செம்மணிப் பகுதிக்கு சென்று விசாரணை நடத்தும் என்றும் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் ராணுவப் பேச்சாளரல் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் சட்ட மருத்துவப் பேராசிரியர் சந்திரசிறி கிரியல்ல, அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், ரகசியப் பொலீஸின் உயர் அதிகாரிகள், சட்மா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் இடம் பெறுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போருக்கு மேலும் ரூபா 800 கோடி!

கொழும்பு, ஒக. 14

யுத்தச்செலவு 800 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்ற சமயம் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்துக்கான செலவில் 800கோடி ரூபா அதிகரித்துள்ளபோதும் அந்த நிதி குறை நிரப்புப் பிரேரணை மூலம் பெறப்படமாட்டாது. பாதுகாப்பு வரி மூலமே பெறப்படும் என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படமாட்டா. யுத்தம் ஒரு புறம் நடக்க மறுபுறம் அபிவிருத்திப் பணிகள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனங்களுக்கான பூர்வாங்க மதிப்பீடு 4500 கோடி ரூபா ஆகும். இதற்கு மேலதிகமாகவே 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-8-7-9-3)

# இராணுவ முகாமுள்ள இடமெல்லாம் மனித புதைகுழிகள் இருக்கலாம்

## ஜனாதிபதிக்கு மாணிக்கதாஸன் பக்ஸ்செய்தி

யாழ்ப்பாணம், ஒக. 14

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள வேலன் இரத்தினசிங்கத்தின் எலும்புக்கூடு, செம்மணியில் மட்டுமன்றி இராணுவ முகாம்கள் அமைந்துள்ள இடங்களில் எல்லாம் மனித புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே சந்தேகத்துக்கு இடமான இடங்களை எல்லாம் தோண்டிப் பார்க்க தாமதமின்றி அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு புளொட் அமைபின் உப தலைவர் என். மாணிக்கதாஸன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள பக்ஸ் செய்தியில் கேட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த முதலாம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் மீதான தாக்குதல்:

# அடையாள அணிவகுப்பு நடத்த நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஒக. 14

ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா களுத்துறைச் சிறைச்சாலையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான 16 பேர் மீதான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி களுத்துறையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி சந்தேக நபர்கள் நேற்று களுத்துறை மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்பொழுதே நீதிவான் ரி. பி. ராஜபக்ஸ அடையாள அணிவகுப்பை நடத்துவதற்கான திகதியை அறிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



யுத்தச் செலவு அதிகரிப்பைப் பார்த்தால் யுத்தம் நீளப்போகுது போலத்தான் தெரிகிறது......!

# எரிபொருள் நிலையங்கள் திடீரென மூடப்பட்டன!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஒக். 14

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.

வவுனியாவில் பதிவுப்புத்தகங்களை வைத்திருப்பவர்களுக்கே எரிபொருள் வழங்க வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வவுனியாவில் பலர் பதிவுப் புத்தகங்கள் இல்லாத நிலையில் வாகனங்களை வைத்துள்ளார்கள் எனவும்—

எனவே பதிவுப் புத்தகங்கள் இல்லாதவர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்— புளொட் அமைப்பினர் கேட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# காமினி பொன்சேகாவின் திரைப்படத்துக்குத் தடை!

## பாதுகாப்பு காரணமாம்

கொழும்பு, ஒக. 14

வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரும் பிரபல சிங்கள நடிகரும் தயாரிப்பாளருமான காமினி பொன்சேகா தயாரிக்கவுள்ள 'தீர்ப்பு' (The Judgement) என்ற திரைப்படத்தைப் பாதுகாப்பு அமைச்சு தடை செய்துள்ளது.

அடுத்த நூற்றாண்டில் அரசியல் ரீதியில் இருகூறாகப் பிளவுபட்ட ஒருநாட்டைச் சித்திரிக்கும் இந்த திரைப்படம் தற்போதைய சூழ்நிலையில் ஆபத்தான விளைவுகளைக் கொண்டுவரக் கூடும் எனக் கருதியே இப் படத்தைத் தடை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவில் உள்ள பிரபலமான நடிகர், நடிகைகளும் அரசியல் தலைவர்கள் சிலரும் இந்த திரைப்படத்தில் நடிக்க இருந்ததாகவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பிற்போடப்பட்டுள்ளது

சாவற்கட்டு ஸ்ரீ அந்திக்குளி ஞானவைரவர் ஆலய வளர்ச்சி நிதிக்காக அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் (24-9-98) 4-00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகிறோம்.

செயலாளர்

சாவல்கட்டு

அந்திக்குளி ஸ்ரீஞானவைரவர் ஆலயம்

ஆனைக்கோட்டை. (58345)

## பாராட்டுகின்றோம்

ஏழாலை மஹாத்மா அச்சக உரிமையாளரும், ஏழாலை திருவருள் மிகு கருணாகரப் பிள்ளையார் மடாலயத் தர்மகர்த்தாக்களுள் ஒருவரும் ஆகிய

**திரு. நவரத்தினம் தெய்வேந்திரன்**

அவர்கள்

*யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக [ J. P. ]*

நியமிக்கப்பட்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவர் நாள் முழுவதும் சிவசிந்தையும் இறை பக்தியும், சைவ ஆலயங்களில் சைவ சமய விதிக்கமைய பூசைகள் நடைபெற வேண்டுமென ஆவல் கொண்டவரும், சமூக சேவை மனப்பான்மை கொண்டவரும் ஆவார்.

எல்லாம் வல்ல ஏழாலை திருவருள் மிகு கருணாகரப் பிள்ளையாரின் பாதாரவிந்தங்களை வேண்டி மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று பல்லாண்டு வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

ஏழாலை மஹாத்மா அச்சக ஊழியர்கள்

இல. 11, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர் மடம், யாழ்ப்பாணம். (58351)

## அந்தியேட்டி நினைவஞ்சலி



மலர்வு: 17 — 11 — 1941

உதிர்வு: 20 — 04 — 1998

**திருமதி நாகம்மா றெஜீனா ஞானப்பிரகாசம்** அவர்கள்

(முன்னாள் ஆசிரிய உப அதிபர்)

அன்னாரின் அந்தியேட்டி நினைவஞ்சலி 16.08.98 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அல்வாய் தெற்கிலுள்ள அவரது 'இராணி மனை' இல்லத்தில் நடைபெறும். நிகழ்ச்சிகள்: இறைவழிபாடு, நினைவு மலர் வெளியீடு, மதியபோசனம்.

அன்பர்களைப் பணிவுடன் அழைக்கின்றோம்.

க. த. ஞானப்பிரகாசம்
குடும்பத்தார்.

அல்வாய் தெற்கு. (5884)

## தொலைபேசி

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரி ஆகியனவற்றிற்கு தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-17)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்று

சுப்பர் ஸ்ரார் ரஜனி நக்மா நடித்த

**பாட்ஷா**

திரைப்படக் கூட்டுத்தாபன ( ரீல்ஸ் ) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58343)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இந்தியாவில் 200 நாள்களுக்கு மேல் ஓடிய

சீவாஜீ = ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த

**முதல் மரியாதை**

( குடும்பச் சித்திரம் )

தினசரி

10-30 — 2-00, 5-00

(புதிய நேரம்)

(சி/4489)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

வெள்ளி, சனி

சத்தியராஜ், மந்த்ரா
குஷ்பூ, மணிவண்ணன்

**கல்யாண கலாட்டா**

(புதிய வெளியீடு)

ஞாயிறு, திங்கள்

மோகன், ரேவதி
கவுண்டமணி, செந்தில்
நடித்த

**உதய கீதம்**

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

Tele. No. 070-212223

(58276)

## யாருடையது

தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்**

நவீன சந்தை,
சாவகச்சேரி.

(சி/4555)

## கிருஷ்ண ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறவுள்ளது. பஜனை, கிருஷ்ண கானம், திருப்பாசுரம், சிறப்புச் சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன.

(ஐ)

# மரண அறிவித்தல்கள்

## அமிர்தநாதர் பிரகாசநாதர்

(மாதகல்)

மாதகலை பிறப்பிடமாகவும் தற்பொழுது இல. 41/1A, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவருமான அமிர்தநாதர் பிரகாசநாதர் 13—08—98 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றதிரு.திருமதிஅமிர்தநாதர்அந்தோனியாப்பிள்ளையின் அன்பு மகனும், லூர்துமலரின் அன்புக் கணவரும், நிர்மலா (இந்தியா), கார்மெலா (உரிமையாளர் சிவராதா, நியூ சிவராதா, மேருஜன் கொம்யூனிக்கேசன்), அன்ரன் (சுவிஸ்), அல்போன்ஸ் (கனடா), அலோசியஸ் (கனடா), ஸ்ரெலா (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவம் (இந்தியா), ஜெகநாதன் (சிவராதா, நியூ சிவராதா, மேருஜன் கொம்யூனிக்கேசன்), விஜி (சுவிஸ்), சாந்தி (கனடா), ஐடா (கனடா), சூரி (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அருட்சகோதரி மேரியோசப்பின், லீலி, கண்மணி ஆகியோரின் சகோதரரும் சுரேக்கா, மதன், சுஜிக்கா, சுவன்யா, ரொனி, றேமோ, சுஜானி, அமிர்தன், மில்ரன், கிளின்ரன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (14—08—98) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மாதகல் புனித தோமையர் ஆலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின் புனித தோமையர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

லூர்துமலர்
(மனைவி)

திரு. திருமதி ஜெகநாதன்
(மகள் மருமகன்)

41/1A, ஈச்சமோட்டை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (58348)

## தம்பையா குணலிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அத்தியட்சகர்)

ஈவினையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா குணலிங்கம் 12.08.98 அன்று காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற தம்பையா தம்பதியினரின் அருமைமைப் புதல்வரும் காலஞ்சென்ற துரைசிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பாமினி (யாழ். மருத்துவபீடம் 1 ஆம் வருடம்), ஜனகன் (கொழும்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் புஷ்பராணி (கொழும்பு), குணமணி (கனடா), கலாநிதி (கொழும்பு), ஆகியோரின் அருமை சகோதரரும் திருமதி நாகேஸ்வரி (கொழும்பு) Dr. து. விநாயகலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தசாமி (Audit General) திருமதி ரதிதேவி ஆயோரின் சகலரும், சேயோன், ஆரூரன் ஆகியோரின் பெரியதந்தையாரும் முகுந்தன், அமுதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.08.98 ஞாயிறு காலை 10.00 மணிக்கு நீர்வேலியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:

திருமதி இ. குணலிங்கம்
(மனைவி

நீர்வேலி. (58334)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



முன்னாள் யாழ். மாநகர முதல்வரும்
எமது கட்சியின் மூத்த உறுப்பினருமான

அமரர்

**திருமதி சரோஜினி யோகேஸ்வரன்**

அவர்களின் ஆத்ம சாந்திக்கு அனைவரும்
இறைவனைப் பிரார்த்திப்போம்.

[சி/4553]

தமிழர் விடுதலைக் கூட்டணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங் சான் சூகியின் கார் மீண்டும் தடுத்து வைப்பு!

யங்கூன், ஓக. 14

மியான்மரில் ஜனநாயகத்துக்கான தேசிய லீக்கின் தலைவி ஆங்சான் சூகி தலைநகர் யங்கூனில் இருந்து புறப்பட்ட சமயம் மீண்டும் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

தமது உதவியாளர் சகிதம் அவர் பயணம் செய்த கார் தலைநகருக்கு மேற்கே பிரதான வீதி ஒன்றில் தடுத்து நிறுத்தப்பட்டது.

மாகாணங்களில் உள்ள தமது ஆதரவாளர்களைச் சந்திப்பதற்காக தலைநகரை விட்டுக் கிளம்பும் போது அவர் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது இது நான்காவது தடவை ஆகும். கடந்த மாத இறுதியிலும் அவரது கார் தடுக்கப்பட்ட போது காருக்குள் அமர்ந்தவாறே அவர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார். அப்போது சூகி நீர் வரட்சி நோயால் பாதிக்கப்பட்டார்.

தற்போது அவரது பயணம் தடுக்கப்பட்டதை அடுத்து அவர் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்பது இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (ஐ)



நைரோபியில் கடந்த வெள்ளியன்று அமெரிக்கத் தூதரக கட்டடம் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலினால் ஏற்பட்ட இடிபாடுகள். (ஐ)

### பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவு:

# இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது!

சென்னை, ஓக. 14

மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நேற்று சென்னையில் நடைபெற்ற அ. தி. மு. க. கூட்டணிக் கட்சிகளின் முக்கிய கூட்டத்தின் முடிவில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

காவிரி நதிநீர்ப்பிரச்சினை தொடர்பாக எழுந்துள்ள புதிய சிக்கலை அடுத்து மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்வதற்காக இக்கூட்டத்தை ஜெயலலிதா கூட்டியிருந்தார்.

இக்கூட்டத்தில் அரசுக்கு ஆதரவை விலக்கிக் கொள்ளும் முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டதால் புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் நிச்சயமற்ற நிலை நிலவியது.

நேற்று நண்பகலுக்குப் பின் இந்நிலைமை மாறியது.

பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு வழங்கும் ஆதரவை



தொடர்வதா, விலக்குவதா என்பது தொடர்பாக உரிய நேரத்தில் உரிய முடிவு எடுக்கும் அதிகாரத்தை அ. தி. மு. க கூட்டணிக் கட்சிகள் ஜெயலலிதாவுக்கு வழங்கியுள்ளதாக மத்திய பெற்றோலியத்துறை அமைச்சரும் தமிழக ராஜீவ்காங்கிரஸ் தலைவருமான வாழப்பாடி கே. ராமமூர்த்தி நேற்று பிற்பகல் தெரிவித்தார்.

ஆதரவை விலக்கிக் கொள்ளும் அவசியம் இப்போது ஏற்படவில்லை. தேவைப்பட்டால் அ. தி. மு. க கூட்டணி மீண்டும் கூடி இது பற்றி ஆராயும் என்றும் அவர் கூறினார்.

செல்வி ஜெயலலிதாவின் இல்லத்தில் நேற்றுக் காலை சுமார் 90 நிமிட நேரம் நடைபெற்ற கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி, ம தி மு க செயலர் வை. கோபாலசாமி, ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி ஆகியோரும் மத்திய அரசில் இடம்பெறும் அ,தி.மு.க கூட்டணி அமைச்சர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## பிரதமரின் செய்தி

மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு வழங்கி வரும் ஆதரவை உடனடியாக வாபஸ் பெறுவதில்லை என அ.தி.மு.க. கூட்டணி நேற்று முடிவு செய்ததற்கு பிரதமர் வாஜ்பாயிடம் இருந்து கடைசி நேரத்தில் வந்த செய்தியே காரணம் என சென்னை அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

மத்திய பெற்றோலியத் துறை அமைச்சரும், தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவருமான வாழப்பாடி கே. ராமமூர்த்தி மூலம் பிரதமர் வாஜ்பாய் அந்த சிறப்புச் செய்தியை ஜெயலலிதாவுக்கு அனுப்பியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## விமானத்தில் ஓட்டை!

சென்னை, ஓக. 14

கொழும்பில் இருந்து அண்ணா விமான நிலையத்தில் 146 பயணிகளுடன் வந்திறங்கிய 'ஏயர் லங்கா' விமானம் ஒன்றில் ஓட்டை ஒன்று காணப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விமானம் எவ்வித ஆபத்தும் இன்றி பாதுகாப்பாக வந்திறங்கியது குறித்து இந்தியன் ஏயர் லைன்ஸ் பொறியியலாளர்கள் ஆச்சரியந் தெரிவித்தனர்.

இந்த விமானம் வேறு 144 பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு புறப்பட இருந்தபோதே 'ஓட்டை' கண்டு பிடிக்கப்படடது. (ஐ)

## ஈரான் பெண்கள் இனி மல்யுத்தம் பார்க்கலாம்

### 20 ஆண்டுகளின் பின் அனுமதி

தெஹ்ரான், ஓக. 14

ஆண்கள் பங்குபற்றும் மல்யுத்தப் போட்டிகளைப் பார்ப்பதற்கு ஈரானியப் பெண்கள் முதன் முறையாக அனுமதிக்கப்படவுள்ளனர்.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் ஈரானியப் பெண்கள் இந்த வாய்ப்பைப் பெறுகின்றனர். தெஹ்ரானில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலக ஆண்கள் மல்யுத்த சம்பியன் போட்டியைப் பார்வையிட பெண்களுக்கு தனிப்பிரிவு ஏற்பாடு செய்யப்படும் என்று ஈரானிய மல்யுத்த சம்மேளனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த இஸ்லாமியப் புரட்சியின் பின் ஆண்கள் பங்குபற்றும் மெய்வன்மைப் போட்டிகளைப் பார்க்க பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## சுதந்திர தினத்தில் நிச்சயமற்ற நிலை!

மத்திய அரசக்கு வழங்கி வரும் ஆதரவை அ. தி. மு. க. கூட்டணி வாபஸ் பெற்று விடும் என்ற தீவிர எதிர்பார்ப்பு கடந்த இரு நாள்களாக நிலவியதால்—

சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றப் போகும் பிரதமர் யார் என்பது தொடர்பாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

பாரதீய ஜனதாக் கட்சி அரசு கவிழ்ந்தால் மாற்று அரசு அமைக்கும் வாய்ப்பு காங்கிரஸ் கட்சிக்கே இருப்பதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஓகஸ்ட் 15 ஆம் திகதியான நாளை இந்தியாவின் 50 ஆவது சுதந்திரதினம் ஆகும்.

அ. தி. மு. க கூட்டணியின் அச்சுறுத்தல் காரணமாக மத்திய அரசு ஒரு நிச்சயமற்ற நிலையில் இந்த சுதந்திர தினத்தை எதிர்கொள்வதாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டனர். (ஐ)



தமக்குரிய மாதாந்த உணவுப் பொருளை வாங்க கியூவில் நிற்கும் ஈராக்கியப் பெண்கள் கொளுத்தும் வெயிலை தமது பாத்திரங்களால் மறைக்கின்றனர். (ஐ)

# வடமேற்கு ஆப்கன் முழுவதும் தலிபானின் கட்டுப்பாட்டில்!

உலக அரங்கில்

காபூர், ஓக. 14

ஆப்கானிஸ்தானில் தலிபான் படைகள் அடுத்தடுத்துப் பல வெற்றிகளை ஈட்டியுள்ளது.

கடந்தவாரம் மஷார் ஏ ஷரீப் என்ற கேந்திர நகரத்தைக் கைப்பற்றிய தலிபான் போராளிகள் நேற்று முன்தினம் வட மேற்கு ஆப்கானிஸ்தானில் உஸ்பெகிஸ்தான் (முன்னாள் சோவியத் ஒன்றிய பிரதேசம்) எல்லையோரம் அமைந்துள்ள எதிரணிப் படைகளின் கோட்டையான ஹைரரோன் என்னும் நகரையும் கைப்பற்றியுள்ளனர்.

புதன்கிழமை காலை எவ்வித எதிர்ப்புமின்றி தலிபான்கள் அந்த நகரினுள் நுழைந்ததாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

தலிபான்களின் இந்த வெற்றியைத் தொடர்ந்து ரஷ்யா தனது எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

உஸ்பெகிஸ்தான் அரசும் எல்லைக் காவலைப் பலப்படுத்தி உள்ளது.

ஹைரரோன் நகரம் தலிபான் வசமாகி விட்டதை அடுத்து வட மேற்கு ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபானின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

## பாலியலால் கிளின்ரனின் செல்வாக்குச் சரிகிறது

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் செல்வாக்கு தற்போது சரிந்து வருகிறது.

இதிலிருந்து அவர் மீண்டு விடுவார் என்று அவரது ஆதரவாளர்களும், சரிந்த செல்வாக்கை அவர் இனி மீட்கவே முடியாது என்று அவரது எதிர்ப்பாளர்களும் கூறுகின்றனர்.

அமெரிக்க அதிபர் கிளின்ரன் தன்னுடன் உறவு வைத்திருந்தார் என்று வெள்ளைமாளிகையின் முன்னாள் பெண் ஊழியர் மோனிகா லெவின்ஸ்கி நீதிபதி முன் கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். பல முறை தாங்கள் இருவரும் உறவு வைத்துக்கொண்டதாக அப்போது அவர் தெரிவித்தார்.

ஒப்புதல் வாக்குமூலத்தில் புதிதாக ஒன்றும் இல்லை. கடந்த ஆறுமாதமாக லெவின்ஸ்கி கூறிவந்தது தான் இது என்று சி.என்.என். கருத்துத் தெரிவித்துள்ளது.

இருப்பினும் 'செக்ஸ்' விவகாரம் கிளின்ரனின் செல்வாக்கைப் பெருமளவு பாதிக்கவே செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லையூர் கதிரை மாதா ஆலயத் திருவிழா சிறப்பிதழ்

## சில்லையூரில் கோயில் கொண்ட கதிரை மாதா திருச்சுரூப வரலாறு

1544 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்துகத்தோலிக்கமதத்தைப் போதித்தபோது ஆங்காங்கே பல கற்கோயில்கள் கட்டப்பட்டன. அவ்வாறே பண்டத்தரிப்பில் இன்று அமெரிக்கன் மிஷன் கோயில் இருக்குமிடத்தில் ஆரோக்கிய மாதாவுக்கென ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. அவ்வாலயத்தில் போர்த்துக்கேயரால் அதி அற்புதவிதமாக பூசிக்கப்பட்ட ஆரோக்கிய மாதாவின் சுருபம் இருந்தது. இச் சுருபம் கதிரையில் அமர்ந்து திவ்விய பாலனை மடியில் வைத்து அரவணைக்கும் பாவனையாய் காணப்பட்டதால் ''கதிரைமாதா'' என நாமம் பெற்றது. ஒல்லாந்தர் இச் சுரூபத்தை அவசங்கை செய்யாதபடி சில்லாலைக் கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்ந்து எவரும் காணாமல் இரவோடிரவாக எடுத்து வந்து சில்லாலையில் மண்ணால் கட்டப்பட்ட கோயிலில் வைத்து வணங்கினர்.

ஒல்லாந்தரின் வேத கலாபனைக் காலத்தில், காலத்துக்குக் காலம் இடம்மாற்றி கிணற்றிலும், சந்து பொந்துகளிலும் மறைத்துவைத்து, அருந்தனம் போலக்காத்து வந்தனர். மூதாதையர்களால் காப்பாற்றப்பட்டு வந்த அதே கதிரைமாதாவின் சுருபமே இன்றும் சில்லாலைக கோவிலில் உள்ளதென்பது அதிசய வரலாறாகும். 1687 ஆம் ஆண்டு முத்திப்பேறு பெற்ற யோசேவாஸ் அடிகள் சில்லாலைக்கு வந்து மறைந்து மறைப்பணி புரிந்து வாழ்ந்த நாள்களில் வயிற்றோட்ட நோயால் மிகவும் பாதிக்கப்பட்ட வேளையில் கதிரை நாயகியிடம் மிகவும் உருக்கமாக வேண்டியதால் விரைவில் பூரண சுகமடைந்தார். அதனால் அவர் கதிரை நாயகியை மனமார வாழ்த்தி ''ஆரோக்கிய மாதா'' என்ற பெயரைச் சூட்டினார். இன்றும் அப்பெயர் சில்லாலை வாழ் மக்களிடையே வழங்கப்பட்டு வருகிறது.

### சில்லையூரின் புராதன சரித்திரப் பெருமை

''ஆல'' என அழைக்கப்பெறுவது குளங்களில் இருந்து நீர் கொண்டு செல்லும் புராதன வாய்க்கால்கள். இத்தகைய வாய்க்கால்களால் வளம் பெற்றதால் சில்+ஆல் என்பது காலப் போக்கில் சில்லாலையென வழங்கப்பட்டது. சில்லாலையைப் பற்றி புராதன இதிகாச நூலான மகாவமிசம் பல வரலாறுகளைக் கூறுகின்றது. சில்லாலையின் மேற்கு எல்லையாக விளங்கும் ''சம்பில்துறை'' (சம்புகொல) அசோகன் மகளான சங்கமித்திரை வெள்ளரசு மரக் கிளை கொண்டுவந்து இறங்கிய துறையாகப் பிரசித்தி பெற்றது. சம்பில் துறைக்கு சமீபமாக அமைந்துள்ள 'திருவடி நிலை' இராமர் சீதையை மீட்க வந்திறங்கிய இடமாகவும். புராதன மக்களான இயக்கர், நாகரிடையே ஏற்பட்ட பிணக்கைத் தீர்க்க புத்தபிரான் வந்திறங்கிய இடமாகவும் மகாவமிசம் கூறுகிறது. இங்கிருந்து சில்லாலை ஊடாக பண்டத்தரிப்பு இராசமுருக்கு வரை பழைய இராச பாதை அமைந்திருந்தகென்பதற்கு ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் செங்கற் குவியல்கள், கட்டடச் சிதைவுகள், மண்ணில் அரை குறையாக மூடுண்டு கிடக்கும் தீர்த்தமாடும் பொய்கைகள் சான்றாகின்றன. இன்றும் சில்லாலையில் காணப்படும் 'பூமணந்தான்' இராசநந்தவனமாக இருந்ததெனவும் 'அதிகாரி கலட்டி' அதிகாரிகள் வசித்த இடமெனவும் அறியக் கூடியதாயுள்ளது. இச் சான்றுகள் சில்லாலை புராதன காலத்தில் ஓர் இராசதானியாக அல்லது பிரசித்தி பெற்ற பட்டினமாக விளங்கியது என்பதை உறுதி செய்கின்றன.

### சில்லாலை வேத விசுவாசத்தின் உறைவிடம்

போர்த்துக்கேயர் ஆட்சியின் போது யேசு சபைக் குருக்கள் சில்லாலைக்கு வந்து வேதம் போதித்தனர். இவர்களால் விதைக்கப்பெற்ற ஞானவிதையானது யேசு விதைப்பவன் உவமையில் கூறிய நல்ல நிலத்திற்கு ஒப்ப பன்மடங்கு பலன் அளித்தது கண்ட குருக்கள், சில்லாலைக்கு ''சின்ன றோமை'' என்ற புனை பெயரிட்டுப் போற்றி வந்தனர். பின்னர் வந்த ஒல்லாந்தர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி பண்டத்தரிப்புக் கோயிலில் இருந்த இரு குருமாரைக் கொலை செய்தனர். திறம்பாத விசுவாசங் கொண்ட சில்லாலைக் கிறிஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

**செயலாளர்,**
ஆலய நிர்வாக சபை,
கதிரை மாதா ஆலயம்,
சில்லாலை.

## பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

வரலாற்றுச் சிறப்பு மிகுந்த சில்லையூர் கதிரைத் தாயின் திருவிழா எப்போதும் போல இவ்வாண்டும் தனிச் சிறப்போடு மிளிர வல்லமையுடன் வழி நடத்தும் இறைவன் தம் ஆசீர் அருள்வாராக!

பலம் மிக்கதொரு பக்திப் பாரம்பரியத்தில் ஆழமாக வேர் பரப்பி, ஆயிரமாயிரம் கிளை விரித்து வளர்ந்து வரும் சில்லையூரின் விசுவாச விருட்சம் இன்னும் பன் மடங்கு பலன் கொடுக்க வரம் வேண்டி அன்போடு வாழ்த்துகின்றேன்.

படைக்கலம் கொண்டு தாக்கினாலும் அடைக்கலம் என்று வருவோருக்கு அற்புத அருள் பொழியும் கதிரைத் தாயின் பாச மிக்க பரிந்து பேசுதல் அனைவருக்கும் அளவின்றிக் கிடைப்பதாக!

நன்றி!

அருள்திரு. அ. அ. றொக்
(பங்குத் தந்தை)


**'கதிரைச் செல்வியை' இவர்களும் வாழ்த்துகிறார்கள்...**

சஜீவன் பல்பொருள் வாணிபம்
(மகளிர் கல்லூரி முன்பாக)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

குணம் போட்டோ
சில்லாலை.

பத்திமா வாச் வேக்ஸ்
(ப. ப. கூ. சங்கம் முன்பாக)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

வேணுகாணன் ஜுவல்லறி
பிரதான வீதி, பண்டத்தரிப்பு

ஜெயந்தா புத்தகசாலை
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
(58331)


## டொனால்ட் கிண்ண கிரிக்கெட்; கால் இறுதி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 14

'டொனால்ட் கணேஷகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து விட்டன.

முதல் சுற்றில் அணிகள் பெற்ற புள்ளிப் பெறுபேறுகளின் அடிப்படையில் அவை கால் இறுதியாட்டங்களில் பங்குபற்றவிருக்கின்றன. கால் இறுதியாட்டங்கள் நாளை ஆரம்பமாகும்.

முதல் சுற்றில் அணிகள் பெற்ற புள்ளிகள் வருமாறு:-

1. யங் ஸ்ரார் வி. க. — 16. 37
2. யாழ். பல்கலைக்கழகம் — 15. 14
3. ஜொனியன்ஸ் வி. க. — 14. 59
4. சென்றலைட்ஸ் வி. க. — 13. 26
5. ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. — 11. 13
6. பற்றிஷியன்ஸ் வி. க. — 9. 54
7. கொக்குவில் ஸீ. ஸீ. ஸீ. வி. க. — 7. 41
8. மானிப்பாய் பரிஷ் வி. க. — 5. 92
9. ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. — 3. 71

கால் இறுதிப் போட்டிகளின் விவரம் வருமாறு:-

★ நாளை:- யங்ஸ்ரார் வி. க. எதிர் மனிப்பாய் பரிஷ் வி. க.

★ நாளை மறுதினம்:- யாழ். பல்கலைக் கழகம் எதிர் கொக்குவில் ஸீ. ஸீ. ஸீ. வி. க.

★ 22 ஆம் திகதி;- ஜொனியன்ஸ் வி. க. எதிர் பற்றிஷியன்ஸ் வி. க.

★ 23 ஆம் திகதி:- ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. எதிர் சென்றலைட்ஸ் வி. க.

மேற்படி தினங்களில் காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டங்கள் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)


## இதய அஞ்சலி

மில்க்வைற் தொழில் அதிபர் சிவதர்ம வள்ளல்

**கலாநிதி திரு. க. கனகராசா**
(சமாதான நீதிவான்)

மீளாத் துயில் கொள்ளும் திரு. க. கனகராசாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பதினருக்கும் எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்,

பணியாளர், பணிப்பாளர்கள்.
கட், நெல். ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி. (சி-4552)


## பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 14

வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும் [illegible] யுள்ளனர். (ஐ)

## நல்லூர் லயன்ஸ் ஏற்பாட்டில் விளையாட்டு விதிகள் பற்றிய விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சம்மேளனம் நடத்தும் விளையாட்டு சட்ட விதிகள் பற்றிய கருத்தரங்குத் தொடரில் இவ்வார இறுதியில் மெய்வன்மைச் சட்டவிதிகள் தொடர்பான விரிவுரைகள் தொடர்ந்து இடம்பெறும்.

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் இந்த வார இறுதிக்கான வகுப்புகளில் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி கே. டபிள்யூ. விமலராஜன், யாழ். கல்வித் திணைக்களம் வலயம்1 இல் உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் தி. அருணகிரிராஜா ஆகியோர் விரிவுரைகளை நடத்துவர்.

இவ்வார இறுதிக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 10. 30 மணி முதல் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பணிமனை கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் லயன்ஸ் கழகத்தின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உபகுழுவின் பொறுப்பாளர் எம். கணேராஜா, யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சம்மேளனத் தலைவர் கே. தர்மகுலசிங்கம் ஆகியோர் இணைந்து விளையாட்டுக்கள் சம்பந்தமான சட்ட விதிகள் பற்றிய இந்த இலவசக் கருத்தரங்குத் தொடருக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர். (உ)

## நீரிறைக்கும் இயந்திரம்

''கெயர்'' நிறுவன நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட மட்டுவில் வடக்கு பெரிய கிராய் குளம், முதலியார் வெளி குளம் ஆகியவற்றைப் பார்வையிட்ட 'கெயர்' நிறுவன அதிகாரிகள் இக்குளங்களிலிருந்து நீரைப் பெறும் விவசாயிகளின் நலன் கருதி நீரிறைக்கும் இயந்திரத்தினை மட்டுவில் வடக்கு விவசாய சம்மேளனத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இந்த நீர் இறைக்கும் இயந்திரத்தினை விவசாயிகள் வாடகைக்குப் பெற முடியுமெனவும், மேலும் நான்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை மட்டுவில் வடக்கு விவசாய சம்மேளனத்திற்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதி செலுத்தாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

## தொழில் திணைக்களம் தயாராகுகிறது

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். மாவட்டத்தில் ஊழியர் சேமலாபநிதி செலுத்தாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல நிறுவனங்கள் நீண்டகாலமாக தொழிலாளர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாமல் இருப்பது தொழில் திணைக்கள பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும்—

ஊழியர் ஒருவர் கடமைக்குச் சேர்ந்த நாளிலிருந்து அவருக்கு ஊழியர் சேமஇலாப நிதி கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும்—

உதவித்தொழில் ஆணையாளர் சி. சி. அருமைநாயகம் தெரிவித்தார்.

அண்மையில் ஊழியர் சேமலாப நிதி செலுத்தாத குற்றத்திற்காக யாழ். செஞ்சிலுவைச்சங்கம், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் போன்றவற்றிற்கு சிவப்பு அறிவித்தலும, 5வர்த்தக நிறுவனங்களுக்கு இறுதி அறிவித்தலும் தொழில் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் 1991 ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1997 டிசம்பர் வரை 20ஊழியர்களுக்கு சேமலாப நிதி செலுத்தவில்லை என்றும்—

இவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியாக 6லட்சத்து 17 ஆயிரத்து 256ரூபா 75சதமும், தண்டப்பணமாக 3லட்சத்து 3ஆயிரத்து 250 ரூபா 36சதமும் செலுத்துமாறு தொழில்திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 1983 ஜனவரி தொடக்கம் 1987 செப்ரெம்பர் வரையும் எம். பி. ராமலிங்கம் என்பவருக்கு ஊழியர் சேமலாப நிதியான 8 ஆயிரத்து 519 ரூபா 80 சதம் செலுத்தப்படவில்லை. தண்டப்பணத்தையும் சேர்த்து மொத்தம் 12 ஆயிரத்து 779 ரூபா 70 சதம் வரை செலுத்துமாறு தொழில் திணைக்களம் சங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்களில் 416 நிறுவனங்கள் ஏப்ரல் 98வரை ஊழியர் சேமலாப நிதியை செலுத்தியுள்ளதாக மேற்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடை காரியாலய ஊழியர் சட்டத்தின் கீழ் 5ஆயிரத்து 701 நிறுவனங்களும், சம்பள நிர்ணய சபைச் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 100 நிறுவனங்களும் யாழ். தொழில் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

கடந்த ஜனவரியிலிருந்து ஜூலை வரையும் பல தொழில் பிணக்குகள் தொழில் திணைக்களத்தினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்றும்—

இதன் மூலம் ஒரு லட்சத்து 91 ஆயிரத்து 165 ரூபா தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## ஆஸ்பத்திரியில் ஒப்படைத்த

# முப்பது சடலங்கள் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 14

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இவ்வாரம் வரையிலான காலப்பகுதியில் 30 இனந்தெரியாத சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் அரசசெலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இச்சடலங்களில் பெரும்பாலானவை துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் ஆகும்.

(ஐ-139)

## அ. அட்டை வழங்கும்

# நடமாடும் சேவை நாளை சங்கானையில்

வலிகாமம் மேற்கு, ஓக. 14

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள அடையாள அட்டை வழங்கும் முதலாவது நடமாடும் சேவை சங்கானைப் பகுதி மக்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ள இருப்பதனால் அன்றைய தினம் அடையாள அட்டைகள் பெற்றுக்கொள்ளாத அல்லது அவைதொடர்பாகபிரச்சினைகள் இருப்பின் பொதுமக்களை தவறாமல் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கா. சந்திரராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஐ-175)

# குருநகர்வாசி பிரான்சில் மரணம்

குருநகர், ஓக. 14

குருநகர்வாசி ஒருவர் பிரான்சில் வீட்டுமாடியில் இருந்து தவறி விழுந்து மரணமானார்.

கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றதாக இங்குள்ள உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐயாத்துரை விசயன் (வயது 38) என்பவரே மரணமானவராவார்.

(ஐ-51)

# வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி முடிவு

வலி.வடக்கு, ஓக. 14

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பில் புதிய பெயர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 18 வயதினைப் பூர்த்தி செய்தவர்களின் பெயர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் கிராம அலுவலர்களினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்போது யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் திணைக்களம் கிராம அலுவலர்கள் வழங்கிய திருத்தங்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணியை ஆரம்பித்துள்ளது. (ஐ-86)

# ஆளுநர் நிதி மூலம் ஆலயங்கள் புனரமைப்பு

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்துள்ள சில ஆலயங்களும், சமூகசேவை நிறுவனங்களும் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரின் நிதிமூலம் புனரமைக்கப்படவுள்ளன.

இந்த நிதியிலிருந்து திருத்தம் செய்யப்பட்டுவரும் கைதடி விழிப்புணர்வற்றோர் சங்கக் கட்டடத்தை மாகாண ஆளுநரின் செயலாளர் சொ. கணேசநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இக்கட்டடத்திற்கு இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

கரவெட்டியிலுள்ள ஆலயமொன்றுக்கும் ஆளுநர் நிதியிலிருந்து ஒருலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-5)

## கொழும்பில் நடைபெறவுள்ள

# அருள்நெறி விழாவில் நால்வர் கௌரவிப்பு

நவாலி, ஓக. 14

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எதிர்வரும் 22 ஆம்திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்படவுள்ள அருள்நெறி விழாவில் இந்து சமய நூல்கள் எழுதிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான அறிவித்தல் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு கிடைத்துள்ளது.

கௌரவிக்கப்படுவோர் விவரம் பின்வருமாறு:

★ சோ. பரமசாமி (இணுவில் தெற்கு. இணுவில்)

★ அருட்கவியரசு சி. விநாசித்தம்பிப் புலவர் (ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம், நாகேஸ்வரம்)

★ அளவெட்டி திருமதி கலைவாணி இராமநாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

★ வித்துவான் பொன். கந்தசாமி (மாதகல்வீதி, மாதகல்)

இவர்கள் கொழும்பு செல்வதற்கு தங்கள் விண்ணப்பத்துடன் அரசாங்க அதிபரைச் சந்தித்து ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாமென மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

(ஐ-100)

# வலி. மேற்குப் பகுதியில் 65 பேருக்கு வீடமைப்புக் கடன்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராமிய வீடமைப்பின்கீழ் 35 பேருக்கும், நகர வீடமைப்பின்கீழ் 30 பேருக்குமாக மொத்தம் 65 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வீடமைப்புக்கடன் தேவையானோர் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய வீடு கட்ட, வீடு திருத்த மாதமொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும், ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் இடைப்பட்ட வருமானத்தை உடையவர்கள் இந்த வீடமைப்புக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பதாரி ஒருவருக்கு கடனாக குறைந்தது 20 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்படவுள்ளது.

(ஐ-175)


IN LOVING MEMORY OF



ARULPIRAGASAM VICTOR RAJAKULASINGHAM
BORN: 26 th May 1916
CALLED TO REST: 1 st Aug. 1995

ROSE GNANAMANY RAJAKULASINGHAM
BORN: 23 rd July 1921
CALLED TO REST: 14 th Aug. 1974

Deep in our hearts you are
Always Near,
Still loved, still missed and
Very Dear,
Time rolls on, three and twenty four years
Have Passed
God grant you both peace in
Heaven Above
While in our hearts you dwell
In Love.

AFFECTIONATELY REMEMBERED:
BY Your Son Karunai &
Daughter-in-law Amirthan.

3, Ramakrishna Avenue,
Colombo - 06

(58285)



சகல அங்கத்தவர்களுக்கும்
புதிய ஆசிரியர்களாயினோர் கவனத்துக்கும்:

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்
(N. P. T. P. S Ltd.)

64 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி நிகழ்ச்சிகள் யா/வண். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

காலம்:- 16 - 08 - 98 ஞாயிறு காலை 9-30 மணி

அதிதி:- திரு. வீ. சக்திவேல்
(முன்னாள் பொதுச் செயலர்)

தலைமை:- திரு. அ. ஜெயராஜன்

★ புதிய நிர்வாக சபைத் தெரிவும், பிரேரணைகளும். இடம்பெறும்.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மு. சி. ஸ்ரீதயாளன்
பொதுக் காரியதரிசி

மு. திருஞானசம்பந்தபிள்ளை
பொருளாளர்

(58308)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3,000 -க்கும் அதிகமானோர் கற்கும் பாடசாலைகளில் இரு பிரிவுகள்

## ஒக்ரோபர் முதல் புதிய நடை முறை

கொழும்பு, ஓக: 14 மூவாயிரத்துக்கும் அதிக மான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் கனிஷ்ட சிரேஷ்ட பிரிவுகள் தனித்தனியாக அமைக்கப் பட உள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்படாமல் இரண்டு அதிபர்கள் வெவ் வேறாக நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் இந்த புதிய நடை முறை அமுலுக்கு வர உள் ளது.

தேசிய கல்வி ஆணைக்குழு செய்த சிபார்சுக்கு அமை யவே இது நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

(இ-9)


**MODERN LONDON STAR**

COMPUTER TRAINING DIVISION

BANK LANE, CHAVAKACHCHERI.

★ Diploma in Software Engineering
★ Diploma in Ms Office 97
★ Certificate in Desktop Publishing (Type Setting)
★ Certificate in Ms Word

98/99 ஆம் ஆண்டுக்கான மேற்படி வகுப்புகள் எமது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

1 ஆம் பிரிவு: 24 - 08 - 98
2 ஆம் பிரிவு: 30 - 08 - 98

அனுமதிப் பத்திரங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(58291)


## விரிவுரை

யாழ்ப்பாணம், ஓக: 14 யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகினால் நடத்தப்படும் நில அளவையும் படவரைகலையும் (தொகுதி நான்கு) சூழல் முகாமைத்துவம் (தொகுதி இரண்டு) ஆகிய கற்றை நெறிகளுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை மண்ட பத்தில் நடைபெறும்.

மேற்படி கற்கை நெறிக்கு பதிவு செய்த பயிலுநர் களை அன்றைய விரிவுரை யில் கலந்து கொள்ளுமாறு வேண்டு கோள் விடுக்கப்பட் டுள்ளது.

(இ-7)


# 5 ஆம் ஆண்டு நினைவு தினம்



**திருமதி நடனசிகாமணி இரத்தினேஸ்வரி**

அன்பின் மலர்வு: 03 - 06 - 1935
அன்பின் உதிர்வு 10 - 08 - 1993

திதி: 15 - 08 - 98

அம்மா அம்மா என்று கதறி அழுதாலும்
ஆறுதல் சொல்ல யாருமே இல்லை அம்மா!
அன்பர்களை மதியபோசனத்திற்கு அழைக்கின்றோம்.

வ. இ. நடனசிகாமணி குடும்பத்தினர்,
சுற்றத்தார், உறவினர்கள். (மணி அண்ணா)

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

தெல்லிப்பழை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

**கேள்விப்பத்திர மூலம் விற்பனை**

01. லொறி உடற்கோப்பு (பொடி) இருசு பழையது - 01.
02. லொறிபற்றி 120, 200 அம்பியஸ் (பாவிக்கப்பட்டது) - 02.
03. அரிசி, மா, சீனி, பேரீந்து (பழுதானவை)

ஆகியன கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் 500 ரூபா செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்று பூரணப்படுத்தி 1998. 08. 24 ஆந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12. 00 மணிக்கு முன் 'பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பழை' என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திரம் எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். வேலை நாள்களில் நேரில் வந்து பொருள்களைப் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

(சி/4541)

யாழ். மாவட்ட
சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ -து)
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**பதவி வெற்றிடம்**

**காரியாலய சேவகர்**
(தற்காலிகம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் காரியாலய சேவகர் பதவிக்கான விண்ணப்பங்கள் சி. க. கூ. சங்க அங்கத்தவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. மேலதிக விவரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 29 - 08 - 1998

பதில் மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4539)

# நீங்காத நினைவில் ஓராண்டு



திருமதி
**சத்தீஸ்வரி கனகரத்தினம்**
(கைதடி கிழக்கு)

மலர்வு 30 – 08 – 1961
உதிர்வு 26 – 07 1997

திதி: 14 – 08 – 1998

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன— உன்
ஆருயிர் அன்பிற்கு ஈடாகுமோ?— தேறுதல்
சொல்ல யாரிருந்தென்ன அம்மா— உன்
திருமுகம் பார்த்தால் போதுமே— எம்மை
துன்பத்தில் ஆழ்த்தி விட்டு எங்கு சென்றாய்?
ஆறாது அம்மா எம் துயரம்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்.

சி. கனகரத்தினம்,
கதிர்வேலவன் அரிசி ஆலை,
கைதடி கிழக்கு,
கைதடி.

(58304)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒத்திவைப்பின்! நோக்கம்

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் ஒத்தி வைத்தமைக்கு எதிரான அரசியல் கட்சிகளின் எதிரலை கொழும்பில் அடிக்கத் தொடங்கி விட்டது. தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் ஒத்திவைப்பை ஆட்சேபித்து நேற்றுமுன் தினம் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தது. பிரஸ்தாப உண்ணாவிரத இயக்கம் தென்னிலங்கை முழுவதிலும் பரவலாக நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று ஐக்கிய தேசியக்கட்சியும் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்பிற்கு எதிராக இயக்கங்களை சமயத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் நடத்தவுள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தேர்தல் ஒத்திவைப்பை எதிர்ப்பதற்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அதே வேளை அவசர கால விஸ்தரிப்பை உடனடியாக நீக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதற்கும் அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த இரண்டு கட்சிகள் மட்டுமன்றி ஜனதாவிமுக்தி பெரமுனையும் (ஜே. வி. பியும்) தேர்தல் ஒத்திவைப்பைக் கடுமையாக எதிர்க்க முடிவு செய்திருக்கிறது.

வடக்குக்கிழக்கில் நடைபெறும் போரில் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பாதையைத் திறக்கும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் வெற்றியை ஈட்டி, அதனை முதலாகவைத்து ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் வெற்றி காணலாம் என்றநம்பிக்கையுடனேயே ஆளும் கட்சி மாகாண சபைத்தேர்தலை ஒத்தி வைத்திருக்கிறது —

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத்தேர்தல் நடைபெற்றால் தனது இப்போதய பலவீனம் வெளியாகிவிடும் என்ற அச்சம் கருதியே தேர்தலை அரசு ஒத்தி வைத்தது— என்று எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் சென்ற முறையைப் போன்று தமிழர்களின் வாக்குகள் சந்திரிக்காவுக்கு கிடைக்குமா?

தமிழர்களின் ஆதரவைப் பெறும் வகையில் 1994 தேர்தலில் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைத்தானும் சந்திரிகா இதுவரை நிறைவேற்றவில்லை அதற்கு மாறாக தமிழர்களுக்கு அழிவையும், அவலத்தையும், இன்னல்களையும், தொல்லைகளையும் தரும் நடவடிக்கைகளே விரிந்து கிடக்கின்றன.

சொல்லில் சமாதானமும் நியாயமான தீர்வும் எனக் கூறிய வண்ணம் செயலில் அதற்கு நேர்மாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு நான்கு வருடங்களை நகர்த்தி விட்டார் ஜனாதிபதி!

தேர்தலைக் கருதி மந்திரம் சொல்லி மாங்காய் விழுத்தும் தந்திரத்திலா தமிழர்களின் வாக்குகளை பெற நினைக்கிறார்? முந்திய தலைவர்கள் காலத்திற்குக்காலம் தமிழர்களை ஏமாற்றியது போலத் தாமும் அவ்வாறே செய்யலாம் என அவர் கணக்குப் போட்டிருக்கிறார் போலும்!

# மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக்க கடவுளை இதயத்தில் இருத்துவோம்

எங்களுடைய வாழ்க்கை மரத்திலுள்ள இலைக்கு ஒப்பானது. இலையானது மரத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் போது அதற்கு பசுமை இருக்கும். செழிப்பு இருக்கும். மரத்திலிருந்து இலை விடுபட்டதும் காய்ந்து சருகாகிப் போய் விடும். அது போல மரமாகிய இறைவனுடன் நாம் தொடர்பு பட்டிருக்கும் போது எமது வாழ்க்கையும் பசுமையாகவும், செழிப்பாகவும் இருக்கும்.

''அல்லல் மிக்க வாழ்க்கையைப் பின்பற்றாது நல்லதொரு நெறியினைப் பின்பற்றுக'' என திருஞானசம்பந்தர் கூறினார். ''துன்பம் இல்லாமலும், துயர் இல்லாமலும் என்றும் இன்பம் பெறுவதற்கு இரவு பகலாக இறைவனை வழிபடுங்கள்'' என திருநாவுக்கரசர் கூறினார். இறைவனோடு இசைந்த வாழ்வு, இன்பத்தோடு இசைந்த வாழ்வு.

''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்'' என்றார் திருவாசகத்தேன் தந்த மணிவாசகர். இமைப் பொழுதும்வீணாக்கலாகாது, காலம் என்ற முத்துக்களை இறைவன்பால் சமர்ப்பணம் செய்து விட்டால் நமக்கு ஒவ்வொரு நாளும் மங்கலத் திருநாள்.

''எமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்'' என்பது நாவலர்வாக்கு.

''ஈஸ்வரனிடத்திலே அசையாத நம்பிக்கை உள்ளவன் உலகமே தலைகீழாகப் புரண்டாலும் அஞ்சமாட்டான். நிலையான சத்தியமானபரம்பொருளை உள்ளத்திலே உணர்ந்து விட்டவனுக்கு கவலை இராது. அத்தகையவன் சாவைக் குறித்துக்கூட கலங்கமாட்டான்.'' என காஞ்சிப் பெரியவர் குறிப்பிடுகிறார்.

## ஞானக் கதிர்

கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்கள். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை, இறைவனே உயிர்த்துணை என்பன ஆன்றோர் வாக்குகள். ''தெய்வம் நமக்குத் துணை பாப்பா ஒரு தீங்கும் வரமாட்டாது பாப்பா'' என்று பாரதியார் பாடியுள்ளார்.

நாம் இறைவனை நோக்கி ஓரடி வைக்க இறைவன் எம்மைநோக்கி பத்தடி வைப்பார் என மகான்கள் எமக்குச் சொல்லியுள்ளனர். கடவுள் நம்பிக்கையுடையவர்கள் தமது வாழ்வுப் பாதையில் திசைதவறியது இல்லை என்பது பெரியோர்களின் அனுபவ உண்மைகள்.

இறைவன் பற்றிய சாயிபாபாவின் பொன்மொழிகளை நோக்குவோம்— அலைகடலில்அலைவாய்த்துரும்பு என அல்லலுறும் மக்களுக்கு இறுதிக் கொழுகொம்பு ஆண்டவன்தான். இதயம் என்னும் கமெராவினால் இறைவன் என்னும் படம் பிடிக்கப்பட வேண்டும். உங்கள் அன்பு என்னும் செல்வத்தை இறைவன் என்னும் வங்கியில் வைப்புச்செய்துவிடுங்கள். அச்சமின்றி உலவி வரலாம். இதயம் என்னும் மண்ணில் இறைவன் நாமம் என்னும் விதையை ஊன்றி அன்பு நீர் பாய்ச்சினால் பக்தி என்னும் மரம் வளரும்.

ஆண்டவன் வானத்தில் தான் இருக்கிறான் என்று எண்ணக்கூடாது. எமது ஊனுக்குள்ளும், உயிருக்குள்ளும் இருக்கிறார். வேண்டுவதைத் தருபவன் இறைவன். இறைவனிடம் வேண்டுவது பொன்னும் பொருளும் மட்டுமல்ல. அன்பையும் அருளையும் வேண்ட வேண்டும்.

### உரும்பிராய் நந்தன்

கடவுளை இருதயத்தில் இருத்தி உங்களால் முடிந்தளவு செயல் புரிந்து வந்தால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிவிடும்.

''எந்தக் காரியத்தைச் செய்தாலும் இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டுச் செய். அதில் விக்கினம் வராது. அப்படி வந்தாலும் அது விரைவில் தீர்ந்துவிடும். கஷ்டம் வந்து விட்டது என்றால் நான் தான் தவறு செய்து விட்டேன் என்று கூட நீ வருந்தத் தேவையில்லை. ஏதோ ஆண்டவன் கிருபை. இத்தோடு போய் விட்டது என அமைதியடை'' என்று சமயப் பெரியோர்கள் அறிவுரை கூறியிருக்கிறார்கள்.

எங்களுக்கு நூறு பிரச்சினை இருக்கலாம். நூற்றியோராவது பிரச்சினையாக ஆண்டவனை வழிபடுவதனைக் கைக் கொண்டால் முதல் நூறு பிரச்சினைகளும் தானாக அகன்று விடும்.

இறையுணர்வு தவிர்க்கப்பட முடியாது. ஆண்டவன் தீர்ப்பில் இருந்து யாவரும் தப்பமுடியாது. வாழ்நாளில் இறைவனை அடையவேண்டும் என விரும்புவோர் தானும், இறைவனும் ஒன்றே என்கின்ற உணர்வைப் பெற வேண்டும்.

எந்த வருத்தத்தையும் மாற்ற மருத்துவன் உண்டு. ஆனால் மனவருத்தத்திற்கு மருத்துவன் வைத்தியநாதன் தான்.

தெளிவான சிந்தனையும் திடமான நம்பிக்கையும் இறைவழிபாட்டிற்கு இன்றியமையாதன.

அன்பு வடிவான, கருணை வடிவான இறைவனை நாம் உள்ளன்புடன் வழிபடுவதனால் மன அமைதி, மனச் சாந்தி, நற்பயன்களைப் பெற்றுக் கொள்வோம். ✶

## நல்லூர் மகோற்சவகால சிறப்பம்சம்

### உள்ளம் உருகிடுதே!

நல்லை நகரு றைந்திடும் நற்றமிழ் நாயகரே!
தில்லை ச்சிவன் மைந்தனே திருவருள் தாராய்
தொல்லை வினை தீர்த்திடவே தூய ஒளி
காட்டிடுவீர்!
இல்லை யெனாது வரமீந்தருள வாருமையா.

வந்தனை செய்தோ மையா வல்வினை தீர்த்திடுவீர்!
சிந்தனை யில்என்று முன் சிங்காரக் காட்சிதானே
கந்தனை க்கரம் தொழுதே கால் பிடித்தோ மையா!
உந்தனை நினைக் கையிலே உள்ளமே யுருகிடுதே.

- இராசையா ஸ்ரீதரன்

### வினை தீர்ப்பாய் வேலா!

கோடி மலர் கரம் சுமந்து
நாடி வந்துன் பாத மிட்டோம்
வாடும் எமைக் காப்பாயப்பா - முருகா
கூடும் துயர் தீர்ப்பாயய்யா

போரதுவும் ஓயவில்லை
காரிருளும் நீங்கவில்லை
வாராதிருக்கும் சமரசத்தை - முருகா
விரைந்து வரச் செய்வாயோ

ஊரிழந்தோம் உறவிழந்தோம்
உரிமைபெற்ற வாழ்விழந்தோம்
ஊருலகம் அறியாதப்பா - முருகா
உலகிலிதை உரைப்பாயய்யா

செல்லவழி அறியாது நிதன்
நல்லைநகர் ஓடி வந்தோம்
வல்ல வேலைத் தருவாயப்பா - முருகா
வெல்ல அருள் புரிவாயய்யா......!

- கலைநேசன் சிவம்

# கொடிகாமம், மிருசுவிலில் மின் விநியோகம் தடை

வடமராட்சி, ஓக. 14

கொடிகாமம், மிருசுவில், கச்சாய், எருவன், இராமர் கோயிலடி ஆகிய பகுதிகளுக்கான மின் விநியோகம் கடந்த மூன்று வாரகாலமாகத்தடைப்பட்டுள்ளது.

மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் இலங்கை மின்சாரசபையினால் நிறுவப்பட்ட 80 கே. வி. ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதாலேயே மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

உதிரிப்பாகம் கிடைத்த பின்னர்தான் இந்த ஜெனரேட்டரை இயக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சாரசபை உதிரிப்பாகத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

(ஐ-173-15)

## வினைத் திறமை தடைகாண் பரீட்சை

வடமராட்சி, ஓக. 14

யாழ். மாவட்டத்திலுள்ள அரச கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கான வினைத் திறமை காண் தடைகாண் பரீட்சைஇம்மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் நான்கு நாள்களுக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலுள்ள கால்நடை வைத்தியதிணைக்களத்தில் நடைபெறவுள்ள இப் பரீட்சையை நடத்துவதற்கென வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் எஸ். தங்கராசா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.


கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்களுக்கான வினைத்திறமை காண்தடை காண்பரீட்சை அண்மையில்நடந்து முடிந்து விட்டது.

(இ-173)

### உதயவாக்கு

நீ எந்நிலையில் இருப்பினும் சரியே சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள் நீ உயர்வடைவாய்.

- கார்லைல்



## வாட்டம் தீர்க்க வா! வா!!

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனை நம்பினேன் வாவா

பண்ணினேர் மொழியான் பாலசுப்பிரமணியா
எண்ணும் எண்ணமெல்லாம் நண்ணும்
வண்ணம் வாவா

தாசனான யோக சுவாமி சாற்றும் பாவைக்
கேட்டுக் கிருபை கூர்ந்து வாட்டம்
தீர்க்க வாவா

- யோகர் சுவாமிகள்

## நாளை

ஆடி - 30

சனிக்கிழமை

திதி: அட்டமி பிற்பகல் 3.32 வரை

நட்சத்திரம்: கார்த்திகை பின்இரவு 01.25வரை.

கார்த்திகை விரதம்

ஜென்மாஷ்டமி நாள்

சுபநேரம்: 03.05 - 04.35

ராகுகாலம்: 09.05 - 10.35

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

11அடி நீளம் உடைய நகைக் கடை, புடைவைக்கடைகளுக்கு உரிய 1 சோடி கண்ணாடி அலுமாரி நாதன் நகைத் தொழிலகம், K. K. S. வீதி, சுன்னாகத்தில் உள்ளது. (25-க்குமுன் தொடர்பு கொள்ளவும்) (58323)

கொம்பிரசன் கொண்டஞ்சர் உட்பட சகல விதமான 'பிறிட்ஜ்' (குளிரூட்டியின்) பாகங்களும் விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் பின்வரும் விலாசத்துக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்; 153, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம் (ஈழ நாடு காரியாலயத்துக்கு அருகில்). (58313)

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை விக்கிரமச்சந்திரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை நல்லூரில் ஞாயிறு பின்னேரம் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் லிங்கம் ஸ்ரோர்ஸ், 168, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (58329)

### மீண்டும் யாழில்

A/L. O/L தமிழ் பாடத்தில் அதிவிசேட சித்திக்கு (6 மாதத்தில்) உத்தரவாதம் தரும் ஆசிரியர் திரு. என். புவனேந்திரனின் B.A. (Hons) வகுப்புக்கள். பிரத்தியேக மாணவரும், வெற்றிடமுள்ள கல்வி நிறுவனங்களும் நாடலாம். 63. பொற்பதிவீதி, கொக்குவில். (58282)

### எரு விற்பனைக்கு

எமது சங்கத்தில் ஆட்டெரு, மாட்டெரு, கோழி எரு விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் 17-08-98 ஆம் திகதிக்கு முன் எருவைப் பார்வையிட்டு விலை விவரங்களைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/4527]

### விண்ணப்பப் படிவம்

வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகின்றது. யாழ். புத்தக நிலையம், 4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (58309)

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணடி கட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) (கன்னாதிட்டி சந்திக்கு அருகில்). (58287)

### பிரத்தியேக வகுப்புகள்

சட்டம், கணக்கியல், ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றுக்கான வகுப்புகள் B. Com, A/L, O/L மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து பிரத்தியேகமாக கற்பிக்கப்படும். தொடர்பு: K. இராமசிவம், சிவன் மாளிகை, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு. (58259)

### இலகு திருமணசேவை

35 வயது கனடா, 35 வயது இத்தாலி மணமகன்களுக்கு மணப்பெண்கள் தேவை. இருவருக்கும் Sponser உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ளனர். தொடர்பு: ஞாயிறுகாலை, துரைவிமலா, 958/8, K.K.S.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [58301]

# புதிய உலர் உணவு முத்திரைகள் பிரதேசசெயலகங்களுக்குவிநியோகம்

## எண்ணிக்கை அரைவாசியாகக் குறைப்பு

வலி. வடக்கு ஓக. 14

இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கான முத்திரைகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நிவாரணம் பெற்று வந்த குடும்பங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து இம் முறை விநியோகிக்கப்படும் முத்திரைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

நல்லூர்ப் பிரதேசசெயலர் பிரிவில் 12 ஆயிரத்து 298 குடும்பங்கள் நிவாரண உலர் உணவு பெற்றுவந்தன.

இம்முறை 6 ஆயிரத்து 149 முத்திரைகளே நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நிவாரணம் பெற்று வந்த குடும்பங்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக முத்திரை வழங்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் 14 வீத மானவர்களுக்கு வழங்க வசதியாக தேவைப்பட்டியல் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (ஐ-86)

## விண்ணேற்பு விழா

கொழும்புத்துறை, ஓக. 14

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் நாளை சனிக்கிழமை புனித கன்னிமரியாளின் விண்ணேற்பு விழா நடைபெறவுள்ளது. (ஐ-30)

## வெற்றிடம்

வடமராட்சி, ஓக. 14

யாழ். மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களில உதவித்தபாலதிபர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

24 உதவித் தபாலதிபர் பதவிகள் யாழ். மாவட்டத்திலுள்ள தபாலகங்களில் வெற்றிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் உற்சவத்தை ஒட்டி ஆலய மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலயத்தில் 'கான கதாவாரிதி' பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் கம்பராமாயண இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 5-15 மணிக்கு 'கங்கை வேடன்' என்ற தலைப்பில் பிரசங்கம் இடம்பெறும். (ஐ-4)

★ ★ ★

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை வாசஸ்பதி ரஜீந்திரனின் இசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

துர்க்காதேவி மகளிர்இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)


கொக்குவில் இந்துக்கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

## பாராட்டுகின்றோம்

எமது கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றி அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறிய

**திரு. த. தேவராஜா**

அவர்களையும்

சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற எமது செயற்குழு உறுப்பினர்

**திரு. க. சிவலிங்கம்**

அவர்களையும்

பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(58326)


## சில்லையூரில்...

(நான்காம் பக்கத் தொடர்)

தவர்கள் ஒல்லாந்தரின் அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் இறந்த குருமாரின் பிரேதங்களை மரியாதையாக எடுத்து வந்து தமது மண் கோவிலில் அடக்கம் செய்தனர். குருக்களில்லாத போதும் தங்களுள் மூப்பர் ஒருவரைத் தெரிந்து தினமும் செப ஆராதனைகள் செய்து வந்தனர். முத்திப் பேறு பெற்ற யோசேவாஸ் அடிகள் ஒல்லாந்தருக்கு அஞ்சி, பரதேசி வேடத்தில் சில்லாலைக்கு வந்தபோது அவரை இனங் கண்டு குறை எதுவுமின்றிப் பராமரித்து, பாதுகாத்து அவர் மூலம் தேவ திரவிய அனுமானங்களைப் பெற்று ஞான வளர்ச்சியடைந்தனர். ஒல்லாந்தர்பலமுறை யோசேவாஸ் அடிகளாரைக் கைது செய்யத் தேடிய போதும் அவருக்கு அடைக்கலம் அளித்து ஆதரித்த பெருந்தன்மை சில்லையூரின் சிறப்பை இன்றுவரை உயர்த்திவரும் முன்னோரின் பண்புகளில் ஒன்றாகும்.


## கண்ணீர் அஞ்சலி



**திருமதி ஞா. மரிய ஸ்ரெலா**

பிறப்பு: 15 - 03 - 1970

இறப்பு: 12 - 05 - 1998

என் அன்பு மனைவி மரிய ஸ்ரெலாவே!
என்குடும்ப விளக்காய் ஒளிவிட்ட என் ஸ்ரெலாவே
என் அன்புச் செல்வங்களின் உயிரே
எனது வழிகாட்டியே பிள்ளைகளின் அம்மாவே
எங்கு சென்றாயம்மா?
இறைவன் எங்களைத் தவிக்க விட்டுத் தடுமாற விட்டு
எங்கு கூட்டிச் சென்றாரம்மா?
நோய் என்ற கொடிய விஷம் உம்மைக் கூட்டிச்
செல்லும் என்று நாம் நினைத்ததில்லையம்மா!
நீர் இவ்வுலகில் எம்முடன் வாழ்ந்த காலங்கள்
எனக்கும் பிள்ளைகளுக்கும் பொற்காலங்கள்!
இனிமேல் நானும் பிள்ளைகளும் கழிக்கும் காலங்கள்
துயரத்தின் காலங்களே!

என் மனைவி ஸ்ரெலாவின் ஆத்மா சாந்தி அடைய குழந்தை யேசுவை வேண்டி நிற்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
கணவர்- ஞானராசா
பிள்ளைகள்: அமலஜான், அமலஜலான், அமலஜனன், அமலஜெலன்.

நெடுந்தீவு. (58332)



## பாராட்டு விழா அறிவித்தல்

மிருதங்க கலாவித்தகர்

**திரு. க. ப. சின்னராசா**

அவர்களின்

நீண்டகால கலைச்சேவையைக் கௌரவித்தும். கலாபூஷண விருது பெற்றமையைப் பாராட்டியும் 1998 - 10 - 04 அன்று

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையும், கலைஞனின் மாணவர்களும், அன்பர்களும் இணைந்து விழா ஒன்றை நடத்தவுள்ளனர். இவரது விழாவிற்குஆதரவு நல்கும் அன்பர்கள், மாணவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
இணுவில் கந்தசுவாமி கோயில்
இளந்தொண்டர் சபை.

(58338)



## கண்ணீர் அஞ்சலி

**அமிர்தநாதர் பிரகாசநாதர்**

(சிவராதா புடைவையகம், நியூ சிவராதா புடைவையகம், மேருஜன் கொமினிக்கேசன் உரிமையாளரின் தந்தையார்).

அவர்களின் இழப்பையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- ஊழியர்கள்

(58336)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
பாமினி அவர்களின்
அன்புத் தந்தையார்

**தம்பையா குணலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

19 ஆம் அணி
யாழ். மருத்துவபீடம்.

யாழ்ப்பாணம். (58335)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரீட்சை நிலைய மாற்ற குளறுபடியால்:

# புலமைப்பரிசில் பரீட்சையை கோட்டைவிட்ட மாணவர்கள்

வலிமேற்கு, ஓக. 14

ஆண்டு 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

சுளிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் சிலர் அவர்களது பரீட்சை நிலையம் திடீர் என மாற்றம் செய்யப்பட்டதால் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் கண்ணீருடன் வீடு திரும்பவேண்டி ஏற்பட்டது.

சுளிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியே பரீட்சை நிலையம் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை பரீட்சைக்குத் தயாராக சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சென்றனர். மாணவர்கள் சிலரை பெற்றோர்கள் சைக்கிளிலேயே பரீட்சை மண்டபத்துக்கு அழைத்து வந்தனர். பரீட்சை மண்டபத்துக்குள்ளே சென்ற மாணவர்களிடம் உங்களுக்கு பரீட்சை அராலி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என திடீரெனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் பதற்றம் அடைந்தனர். பெற்றோர்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தனர். அவசர அவசரமாக மாணவர்களை சைக்கிள்களில் ஏற்றிக்கொண்டு அராலி இந்துக் கல்லூரிக்கு விரைந்தனர். சில மாணவர்கள் போக்குவரத்து வசதி இல்லாமையினால் கண்ணீர் சிந்தியவாறு ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதை காணக்கூடியதாக இருந்தது.

பரீட்சை அராலி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என முன்கூட்டியே அறிவித்திருந்தால் மாணவர்களுக்கு இந்த அவலம் ஏற்பட்டிருக்காது.

கல்வி அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலினால் ஏதுமறியா சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என பெற்றோர்கள் கவலை வெளியிட்டனர்.

பரீட்சை நிலையங்களைக் கடைசி நேரத்தில் மாற்றம் செய்வதை இனிமேலாவது நிறுத்தவேண்டும் என பெற்றார் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-157)

## அறிவித்தல்

**தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு**

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினரால் வழமைபோல் கடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

இடம்: இந்து இளைஞர் சங்கப் பணிமனை
காலம்: 16 - 08 - 1998 [ஞாயிறு]
நேரம்: முற்பகல் 9-00 மணி

தலைவர்
இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.

(58347)

## கண்ணீர் அஞ்சலி

கபிலா காலணியக ஊழியரான
**க. தங்கவேலு**
அவர்களின் தந்தையாரான
**நல்லபெருமாள் கனகசபை**
அவர்களின் மறைவையிட்டு
ஆழ்ந்த கவலையடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

கபிலா காலணியகத்தார்,
இல. 4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(58344)

## மரண அறிவித்தல்கள்

### சி. சிவசுப்பிரமணியம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் 10-08-1998 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பிசெல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், லீலாவதியின் அன்புக் கணவரும், சிவானந்தி, லிங்கராசன், கலைவாணி ஆகியோரின் தந்தையும், பத்தகுமார், கலைவாணி, சிற்சபேசன் ஆகியோரின் மாமனாரும், திருமதி கனகாம்பிகை முருகையா, (காலஞ் சென்றவர்கள்) ஆறுமுகம், சிவகுரு, திருமதி சிந்தாமணி தம்பியப்பா, திருமதி பாலாம்பிகை பொன்னம்பலம், அம்பிகாபதி ஆகியோரின் உடன்பிறப்பும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. அம்பிகாபதி (சகோதரன்)

இராமகிருஷ்ண வித்தியாலய ஒழுங்கை,
கொக்குவில்.

(சி/4554)

### சின்னத்துரை இராமநாதன்

சின்னத்துரை இராமநாதன் (முன்னாள் பிரதம காசாளர், சாமுவேல் அன் சன்ஸ் அன் கோ, லிமிடெட், கொழும்பு) அவர்கள் 12-08-98 புதன் கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் மானிப்பாய் சத்தியபாமா (இந்திரா) அவர்களின் பாசமிகு கணவரும், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், மானிப்பாய் காலஞ்சென்ற திரு. திருமதி குலத்துங்கம் - தேவசவுந்தரி தம்பதியினரின் அன்பு மருமகனும், சுகந்தி, முகுந்தன், சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுறமி, வத்ஸலன், நிரோஷா, சானுஜா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-08-98) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்

"மகேஸ்வரா",
மகேசன் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(58349)

## விதை நெல் விநியோகம்

தென்மராட்சி, ஓக. 14

பளைப்பிரதேச காலபோக நெற் செய்கையாளர்களுக்கு விதை நெல் வழங்க கமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விதை நெல் தேவைப்படுவோர் தத்தமது பிரிவு விவசாயசம்மேளனங்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுளது. (ஐ-117)

## திருமலையில் இலக்கிய விழா

யாழ்ப்பாணம், ஓக. 14

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் இலக்கிய விழா எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறும்.

இந்த இலக்கிய விழாவில் தமிழ் நாட்டிலிருந்து மூன்று அறிஞர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் 10 ஈழத்து அறிஞர்களின் கட்டுரைகளும் விழாவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த விழாவில் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து பதிவாளர் க. குணராசா, விஞ்ஞானபீடாதிபதிபேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், நுண்கலைத் துறை தலைவர் கலாநிதி சபாஜெயராசா, தமிழ் விரிவுரையாளர் கலாநிதி [illegible] ளியல்துறை தலைவர் வி. பி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5

## படை அதிகாரியின் மேசையில் நாகபாம்பு!

யாழ்ப்பாணம், ஓக. 14

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாகர்கோயில் அருகில் உள்ள படை முகாமினுள் புகுந்த நாகபாம்பு படை அதிகாரியின் மேசையில் சுருண்டு படுத்துக் கொண்டது.

வழமைபோல் அலுவலகத்துக்கு வந்த படை அதிகாரி நாகபாம்பைக்கண்டு அதிர்ச்சியுற்றார். ஏனைய படையினருடன் ஆலோசித்து விட்டு அருகிலுள்ள பூர்வீக நாக தம்பிரான் ஆலய குருக்களிடம் சென்று விடயத்தைக் கூறினார்.

படையினரின் முகாமுக்குச் சென்ற ஆலய பூசகரான சிவசண்முகக் குருக்களைக் கண்டு படமெடுத்து ஆடிய பாம்பு குருக்கள் மந்திரித்து தீர்த்தம் தெளித்த பின் அடங்கியது.

அதனையடுத்து குருக்கள் நீட்டிய தடியில் ஏறிய பாம்பை நாகதம்பிரான் ஆலய தலவிருட்சமான மருத மரத்தினருகில் விட அது மருதப்பொந்தினுள் சென்று மறைந்தது.

இச்சம்பவத்தையடுத்து படையினர் ஆலயத்துக்கு வந்து வழிபாடியற்றிச் சென்றனர். (ஐ-8,117)

## இதுவரை நியமனம் கிடைக்கவில்லை

1995ஆம் ஆண்டு நடைபெற்ற தட்டெழுத்தாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் (85 புள்ளிகள் யாழ். மாவட்டத்தில் 5-வது நிலை) பெற்று சித்தியடைந்து அதற்கான நேர்முகப்பரீட்சை(யாழ். செயலகத்தில் நடைபெற்றது)க்குத் தோற்றிப் பத்து மாதங்களாகியும் இதுவரை நியமனம் கிடைக்கவில்லை.

காரணம் நான் கூட்டுத்தாபன சேவைக்கு விண்ணப்பித்தேன். நான் அரச சேவைக்கு விண்ணப்பிக்க முடியாது. ஏனெனில் எனது கல்வித்தகமை கூட்டுத்தாபன சேவைக்குத்தான் போதுமானதாக உள்ளது. அரச சேவைக்கு விண்ணப்பிக்க க. பொ. த. சா/தரத்தில் 4சி இருக்கவேண்டும். எனக்கு டி. 2சி மட்டும் இருந்தபடியால் நான் கூட்டுத்தாபன சேவைக்கே விண்ணப்பித்தேன். நான் கூடுதல் புள்ளி பெற்றும் அரசசேவைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை.

யாழ். மாவட்டத்தில் மூன்று தொகுதிகளாக தட்டெழுத்தாளர் நியமனங்கள் வழங்கப்பட்டுவிட்டன. இவர்கள் அனைவரும் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களே. நான் பலமுறை யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது எப்படியாவது உங்களுக்கு நியமனம் கிடைக்கும் பொறுத்திருங்கள் என்று கூறுகிறார்களே தவிரஇதற்கான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. 10 மாதங்கள் பொறுத்திருந்தும் ஏமாற்றம் தான் மிச்சம்.

மேலும் கூட்டுத்தாபன சேவைக்குரிய வயதெல்லை 35 ஆகும். தற்பொழுது 35 வயதுடைய என் போன்றவர்களுக்கு இவ் வருடமும் கடந்துவிட்டால் வயது எல்லையும் கடந்து விடும். அத்தோடு புதிய ஆண்டுக்கான, தட்டெழுத்தாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சை நடைபெற்றால் இதற்கு முன்பு நடைபெற்ற போட்டிப் பரீட்சைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படும் என்ற ஒரு விதியும் உண்டு. எனவே, ஒரு பக்கம் வயது எல்லை கடந்து விடும் நிலையிலும், மறுபக்கம் நியமனம் கிடைக்காத நிலையிலும் நின்று செய்வதறியாது தவிக்கிறோம். எமது பிரச்சினையை யாரிடம் கூறுவது? அரச சேவைக்கும் கூட்டுத்தாபன சேவைக்கும் தொடர்பில்லை என்கிறார்கள். அப்படியாயின் என் போன்றவர்களின் நிலை என்ன? இவ்விடயத்தில் பொறுப்பான அதிகாரிகள் தலையிட்டு எமக்கு (கூட்டுத்தாபன சேவைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு) நியமனம் கிடைக்க உதவிபுரிவார்களா?

ஆ. தவமணி

யாழ்ப்பாணம்.

## வாசகர் திருமுகம்

### ஆவன செய்வார்களா?

ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ள பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், சங்கானை, மானிப்பாய் போன்ற பகுதிகளில் உள்ள சில வீடுகள் படையினரின் உபயோகத்தில் உள்ளன.

இந்த வீடுகள் பெரும்பாலும் விதவைகள், ஆதரவற்றவர்கள், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள் போன்றவர்களுடையதே ஆகும். இத்தகைய நிலையிலுள்ள வீட்டு உரிமையாளர்கள் வீட்டுத் தளபாடங்கள், சமையற்பாத்திரங்கள் ஆகியனவற்றை கைவிட்ட நிலையில் வற்புறுத்தி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

உண்மையிலேயே இவர்கள் பயன்தரு மரங்களிலிருந்தும், ஆடு, மாடு முதலிய விலங்குகளிலிருந்தும் கிடைக்கும் வருமானத்திலேயே பெரும்பாலும் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். சொந்த வீட்டைவிட்டு வெளியேறியதால் ஆள்களற்ற வீடுகளில் வசித்து, பின் அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் வந்தவுடன் வீடுமாறி அடிக்கடி அல்லலுறுகிறார்கள். சிலர் வாடகை கட்டி வேறு வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இத்தகையவர்களுக்கு படையினர் சிறிதளவு வாடகைப் பணஉதவி புரிந்தாலும் உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக படையினரின் உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து ஆவன செய்வார்களா?

சங்கானை, கா. சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அஞ்சல் அலுவலக கட்டடத்தை மீள அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக 14

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் (வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகில்) முற்றாகச் சேதமடைந்த நிலையிலிருக்கும் யாழ். பிரதம அஞ்சல் அலுவலக கட்டடத்தை மீள அமைத்துத்தருமாறு வடமாகான பதில் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கொழும்பிலுள்ள தலைமையக அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். பிரதான வீதியில் இயங்கி வந்த இந்த அஞ்சல் அலுவலகம் யுத்த நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்ததைத் தொடர்ந்து 1987 ஜனவரி 20 ஆம் திகதி இடம் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலக கட்டடத்தினை மீளக்கட்டுவதற்கு கோடிக்கணக்கான ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தபாற் திணைக்களத்துக்கான ஒருங்கிணைந்த கட்டடத் தொகுதியைக் கொண்டதாக இப்புதிய கட்டடம் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்பொழுது வாடகைக் கட்டடங்களில் இயங்கும் தபால் திணைக்கள நிர்வாகப் பிரிவு, கணக்கீட்டுப் பிரிவு போன்றவற்றையும் உள்ளடக்கியதாக இக் கட்டடம் அமைய வேண்டும் என அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## ஒரே நபருக்கு எதிராக 56 வழக்குகள் தாக்கல்

ஆனைமடுவ, ஒக. 14

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக பலரிடம் பணத்தை வாங்கி ஏமாற்றியதாகக் கூறப்படும் ஒருவர் மீது புத்தளம் பொலீஸார் 56 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நபரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்த பலர் மேற்கொண்ட முறைப்பாடுகளையடுத்து புத்தளம்பொலீஸார் கடந்த ஒருவருடமாக இந்த நபரைத்தேடி வந்தனர்.

இந்த நபர் அண்மையில் கைது செய்யப்பட்டு புத்தளம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். (இ-10)

## ஆயுதங்கள் மீட்பு

குளியாப்பிட்டி, ஒக. 14

குளியாப்பிட்டி பொது மயானத்திலுள்ள புதைகுழி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி. 56 ரக தானியக்கித் துப்பாக்கி, கைக்குண்டு, மகசின் மற்றும் 300 ரவைகள் ஆகியனவற்றை குளியாப்பிட்டிப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவற்றைப் புதைகுழியில் மறைத்து வைத்தவர்கள் தொடர்பான தகவல்கள் எவையும் இதுவரை பொலீஸாருக்குக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் இலவச நீரிழிவு வைத்திய பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், ஒக. 14

கல்வியங்காடு சந்தையில் அமைந்துள்ள வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தில் (படிப்பகம்) எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மாதாந்த இலவச நீரிழிவுப் பரிசோதனையும், வைத்திய பரிசோதனையும் நடைபெறவுள்ளன.

இப் பரிசோதனைகளில் பொதுமக்கள் பங்குபற்றி வைத்திய ஆலோசனைகளையும், வைத்திய பரிசோதனைகளையும் பெறும்படி நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பா. தவபாலன் கோரியுள்ளார்.

மேலும் இதே நிலையத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி இலவச கண் பரிசோதனையும், கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்புவோர் முன்கூட்டியே தமது பெயர்களை மேற்படி படிப்பகத்தில் லயன் ஆர். இராஜகுலேந்திரனுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது (இ)


## வாழ்த்துகின்றோம்

தென் இலங்கையில் நடைபெறவுள்ள
அனைத்து பல்கலைக்கழக
மினி ஒலிம்பிக் போட்டியில்
கலந்து கொள்ள இன்று யாழ். நகரிலிருந்து புறப்படும்
யாழ். பல்கலைக்கழக ஹொககி அணி
அச் சுற்றுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுச்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**மெடிலாண்ட் ஆங்கில**
மருந்து விற்பனை நிலையம்
பிரதான வீதி, சங்கானை. (58350)



## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய கணித ஆசிரியை
செல்வி இ. யூ. றஞ்சினி
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**சிசிலியா இராசேந்திரம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்
(58346)


## வெளிவாரி பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 14

நாளை ஆரம்பமாக உள்ள பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு கலை விஞ்ஞான வெளிவாரிப் பரீட்சைகளை யாழ். பல்கலைக் கழகத்திலும் நடத்துவதற்காக பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவர் இன்று யாழ்ப்பாணம் வர உள்ளனர்.

இப்பரீட்சைகளை இங்கு நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்வதற்காக பேராதனைப்பல்கலைக்கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் எஸ். தில்லைநாதன், வி. நந்தகுமார் ஆகிய இருவருமே யாழ்ப்பாணம் வர உள்ளனர்.

நாளை ஆரம்பமாகும் இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 27 ஆம் திகதிவரை நடைபெற உள்ளன. இ-5-9)

## விஜயரட்ண நினைவாக நிகழ்வுகள்

வடமராட்சி, ஒக. 14

வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரியாக இருந்த காலஞ்சென்ற மேஜர்ஜெனரல் எல். ஏ. ஆர். விஜயரட்ணாவின் மூன்றாம் மாத நினைவு நேற்று இரவு பிரித் ஓதுதலுடன் ஆரம்பமானது.

பருத்தித்துறையில் நடைபெறும் இந்நினைவை ஒட்டி இன்று வெள்ளிக்கிழமை வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஆயிரத்து 500 பேருக்கு உணவுப் பார்சல்களும், உடல் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகளும் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகள் வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரி கேணல் சரத் கருணாரட்ண தலைமையில் நடைபெறும்.

இதில் 52 ஆவது படையணியின் மேஜர் ஜெனரல் டபிள்யூ. பி. செனிவிரட்ணவும் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-173)

## சமய நிகழ்ச்சிகள்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் நாளை சனிக்கிழமை 19 ஆம் திருவிழா மாலை 4-00 மணிக்கு கார்த்திகைத் திருவிழா நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

கொக்குவில் — நந்தாவில் கற்புலத்து அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு ஸ்ரீ முருகப்பெருமானுக்கு கார்த்திகைத்திருவிழா நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

புலோலி காந்தியூர் வராத்துப்பளை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அபிஷேகம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். அபிஷேகத்தின் இறுதி நாளான இம் மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

அபிஷேக தினங்களில் இரவு வேளையில் மஹாபாரதம் தொடர் படக்காட்சி காண்பிக்கப்படும். (ஐ-173)

### எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்)

டிருந்தனர்.

எனினும் அவ்வாறு புத்தகங்கள் இல்லாதவர்களுக்கு எரிபொருள் வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டதனாலேயே எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்ட [illegible] (இ-9)

### இராணுவ...

(முதலாம் பக்கம் தொடர்)

புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய மலசல கூடக் குழியில் இருந்து மக்களால் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடு அவரதுமனைவியால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்ட இடத்தில் 1995 ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் முகாமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மிக அண்மையிலேயே இப் பாடசாலை பொது மக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சூரியப் பிரகாசம் ஒன்று, இரண்டு இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு காணமற்போனோர் 700 க்கும் அதிகமானோர் பற்றி எந்தவிதமான தகவலும் தெரியாமல் உள்ளது.

இவ்வேளையில் புன்னாலைக்கட்டுவனில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு பலவிதமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் செம்மணியில் தான் அனைத்து உடல்களும் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற பரவலான சந்தேகங்களை நீக்கி இவ்விதமான இராணுவ முகாம்கள் அமைந்திருந்த இடங்களிலும் கைதாகி காணமற்போனோரின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

எனவே யாழ். நகரில் இயங்கும் மனித உரிமை அமைப்புகள், கைதாகி காணமற்போனோர் சங்க உறுப்பினர்கள், அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழுவினரை இவ்விதமான சந்தேகத்துக்கு இடமான இடங்களைதேடிப் பார்ப்பதற்கு எந்தவிதமான தாமதமின்றி அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தமோதலில் உயிரிழந்த 15 புலிஉறுப்பினர்களின் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர் என்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

★ கம்ஸன் அல்லது நகுலேஸ்வரன் ( சிவஞானம் அகிலேஸ்வரன் — சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா)

★ குமுதா (கந்தையா பத்மாவதி — மாத்தளை)

★ மாதவி (சிவலோகநாதன் தயாளினி — யாழ்ப்பாணம்)

★ மன்மதன் அல்லது மதன் (வேலுப்பிள்ளை விஷ்ணுகாந்தி — மாத்தளை)

★ இசைத்தமிழ் (நவரத்தினம் குகனேசன் — புளியம்பொக்கனை)

★ சந்தியா ( சுப்பிரமணியம் கௌரி —யாழ்ப்பாணம்)

★ வலம்புரி அல்லது ரஜனி ( கந்தையா விஜயலட்சுமி — முழங்காவில், மன்னார் )

★ தமிழவை ( கோவேந்தன் செந்தமிழ்ச்செல்வி — முத்தையன் கட்டு)

★ கலையானி (பொன்னுத்துரை கலாவதி —யாழ்ப்பாணம்)

★ புவீந்திரன் ( நடராசா ரகுநாதன் — புதுக்குடியிருப்பு)

★ கதிர்க்குமரன் ( ஏபிரகாம் ஆபிரகாம் — வட்டக்கச்சி)

★ கலைவாணி (இராமச்சந்திரன் சுபாசினி — புளியங்குளம், வவுனியா)

★ தீரரசி ( மூக்கையா விக்னேஸ்வரி—கோணாவில்)

★ பதுமை (தங்கவேலு சசிகலா — யாழ்ப்பாணம்)

★ சிறிதேவன் (அழகன் ஐயாத்துரை — கிளிநொச்சி)

இவர்களே அந்தப் 15 பேரும் ஆவார்.

படையினரின் சடலங்களில் 9 சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரியவந்தது. (இ-87-9-21-3)

### செம்மணிப்...

(முதலாம் பக்கம் தொடர்)

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் செம்மணி விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் சாரமாரியாகக் கேள்விகளைக் கேட்டனர்.

தபால், தொலைத் தொடர்புத் தகவல் துறை அமைச்சர் மங்கள சமரவீரவுடன் தொடர்பு கொண்டு கேள்விகளுக்குப் பதிலளிப்பதாக இராணுவப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிருஷாந்தி கொலைவழக்கு எதிரிகளில் ஒருவரான இராணுவச் சிப்பாய் ஒருவர் தெரிவித்த தகவலை அடுத்தே செம்மணி விவகாரம் தெரியவந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7-9-3)

### காமினி..

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னையகால மற்றும் தற்கால அரசியல்வாதிகளின் பாத்திரங்கள் இந்த திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளதாகவும்—

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பாத்திரத்தில் நிமல் லக்ஷபதிஆராச்சி நடிக்கவிருந்தா எனவும்—தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இந்த திரைப்படத்தின் கருப்பொருளை தாம் ஏற்கனவே ஜனாதிபதிக்குக் கூறி அவரது சம்மதத்தைப் பெற்றதாகவும்—

முன்னர் தான் நடித்த சில படங்கள் இவ்வாறு தடைவிதிக்கப்பட்டவையே எனவும்—

காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-10-9)

### அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்)

சந்தேக நபர்களில் ஒருவர் தற்போது நடைபெறும் ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்.

இதனாலேயே அடையாள அணிவகுப்பை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக நீதிவான் கூறினார்.

டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை பொலீஸாரின் பாதுகாப்பில் இருந்த அவரின் செலூலர் தொலைபேசி மற்றும் பொருள்களை அவரிடம் வழங்குமாறும் நீதிவான் நேற்று பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சக மனையில் 14-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org